**கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் - 2019**

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என தற்போது அறியப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல்-பி 99 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. சனத்தொகை அதிகமாகவுள்ள பகுதிகளில் சிறந்த சுகாதார வசதிகளின் புனரமைப்பு உள்ளடங்கலாக கண்டி நகரத்தில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் என்பவற்றிற்காக முறையான முறைமையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிறந்த சுகாதார வசதிகள் ஊடாக வாழ்க்கைச் சூழல் மற்றும் மகாவலி ஆற்றின் தண்ணீர் தரத்தினை முன்னேற்றுதல் அதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நல்ல நிலையை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,982 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 17,278 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 14,087 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி ரூபா 4,060 மில்லியனிற்கு சமமான ஜப'பான் ஜென் 3,191 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 பெப்ரவரி 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 செப்தெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம்

ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வேலைகள் ரூபா 11,945 மில்லியனாக .ருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், நேரொத்த நடைபெறும் வேலைகளின் பெறுமதி ரூபா 12,804 மில்லியனாகும். செயற்திட்டமானது இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டு ரூபா 859 மில்லியன் வித்தியாசம் இனங்காணப்பட்ட போதிலும் செயற்திட்டத்தால் வித்தியாசத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் நடைபெறும் வேலைகள் அதிகரித்துக் கூறல் | செயற்திட்டமானது திருத்திய நட்குறிப்பு பதிவினை செயவதற்கும் அதனை சபைக்கு சமர்ப்பிப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் இறுதி கணக்குகளிற்குள் சரியான விலைப் பட்டியல் பெறுமதியை எடுத்திருந்ததுடன் 2020 இல் கைதவிர்ப்பின் பின்னரே சபையினுயை கணக்கிற்குள் விலைப் பட்டியலை எடுக்கின்றன. சபை கணக்குகள் 2020 இலிருந்து சரிசெய்யப்படும். | உரிய காலத்தில் வித்தியாசங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 16.44 மில்லி யன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் வாகனங்களாக புறம்பாகக் காட்டுவதற்குப் பதிலாக சிவில் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் வாகனங்களின் கிரயம் குறைத்துக் காட்டப்படுவதுடன் சிவில் வேலைகள் அதிகரித்துக் காட்டல். | வாகனங்கள் கொடுப்பனவு செய்யும் நேரத்தில் நடைபெறும் வேலைகளில் வரவு வைக்கப்பட்டு நாட்குறிப்பு பிரிவுகள் தயாரிக்கப்பட்டு நடைபெறும் வேலைகளிலிருந்து அகற்றுவதற்கு சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன தற்போது சொத்துப் பதிவேட்டில் சேர்க்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | சொத்துக்களின் வித்தியாசமான பயன்பாட்டு காலத்தின் அடிப்படையில் நடைமுயல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கடன் உடன்படிக்கைக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| எஸ்எல்பி 99 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியல் | செயற்திட்டத்தால் செலவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் வடிவமைப்பு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி, பிரதான இறைக்கும் இல்லங்கள், சுத்திகரிக்கப்பட்ட நீர் வெளியேற்றும் முறைமை, சேறு உலர்த்தல் விரிப்பு போன்றவற்றின் நிர்மாணம் என்பவற்றின் ஒப்பந்தங்களின் கீழ் ரூபா 9.64 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 5.74 மில்லியன் கூட்டுத்தாகையான விடுதிக் கட்டணங்கள், உணவுச் செலவினம் பொன்ற உள்நாட்டு செலவினங்கள் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் செயலாற்றலை பாதகமாக பாதிக்கும் கடன் உடன்படிக்கை நிபந்தனைகளின் மீறல். | ஒப்பந்த உடக்படிக்கைக்கு அமைய டிஎபீ உறுப்பினர்களின் கொடுப்பனவு உள்ளதுடன் இது உப பிரிவு 20.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பொது நிபந்தனைகள் மற்றும் தகராறு தீர்ப்பனவு உடன்படிக்கையின் உட்பிரிவு 6(பீ) இன் நிபந்தனை என்பவற்றின் கீழ் ஏற்றுக்கெள்ளக்கூடிய கட்டணங்கள் (செயலக சேவைகள், தொலைபேசி, தபால், தொலைநகல், பிரயாணம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட) டிஎபீ உறுப்பினருக்கு செலுத்தப்பட வேண்டும். | கடன் உடன்படிக்கை நிபந்தனைகளுடன் இணங்கி நடக்க வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்**

| | நடவடிக்கைகள் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னெற்றம் எதிர்பாரக்கப்பட்ட செயலாற்றல் | உள்ளபடியான செயலாற்றல் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | | | | | |
| | - உட்பகுதி கழிவு வலையமைப்பு | | | நிர்மாண தாமதம் செயற்திட்ட நோக்கங்களை பாதகமாக பாதிக்கும் | முகாமைத்துவத்தின் கருத்துகள் பெறப்பட்டிருக்கவிலலை | குறித்த காலப்பகுதிக்குள் ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | -திறந்த வெளி | 6.23 கிமீ | 3.40 மீ | | | |
| | -அகழி | 2.87 கிமீ | 1.85 கிமீ | | | |
| | - கிளைக் கழிவு வலையமைப்பு | | | | | |
| | -திறந்த வெளி | 71.1 கிமீ | 57.38 கிமீ | | | |
| | -அகழி | 5.8.கிமீ | 0.82 கிமீ | | | |
| | - வீட்டுக் கழிவு -திறந்த வெளி | 135 கிமீ | 125.32 கிமீ | | | |
| | -அகழி | 11.24 கிமீ | 0.99 கிமீ | | | |
| | -பிரதான பதவியணி வலையமைப்பு | | | | | |
| | -திறந்த வெளி | 3.18 கிமீ | 1.90 கிமீ | | | |
| | -அகழி | 173 மீ | 17 மீ | | | |
| | - ஆட்புல இறைக்கும் இல்லம் | 09 எண்ணிக்கை | 05எண்ணிக்கை | | | |
| (ஆ) | வீட்டு இணைப்பு நிர்மாணம் | 5,449 | 1,680 | கண்டி நகரத்தில் வாழுகின்ற மக்களிற்கு சிறந்த சுகாதார வசதிகள் வழங்குவதில் தாமதம். | முகாமைத்துவத்தின் கருத்துகள் பெறப்பட்டிருக்கவிலலை | குறித்த காலப்பகுதிக்குள் ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | உட்பகுதி கழிவு, கிளைக் கழிவு மற்றும் ஆட்புல இறைக்கும் இல்லம் என்பவற்றின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2019 யூலை 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக இந்த ஒப்பந்த வேலைகள் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் காலத்தை நீடிப்பதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளாமல் 2019 திசெம்பர் 31 இன் பின்னரும் தொடர்ந்திருந்தது. | நலிவான செயற்திட்ட முகாமைத்துவம் செயற்திட்ட செயலாற்றலை பாதகமாக பாதிக்கக் கூடும். | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவிலலை | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒபப்பந்தகாரருடன் பேச்சுவார்த்தைக்கு வேண்டப்படுவதுடன் கால நீடிப்பிற்கான அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும் கடன் திருப்பிச் செலுத்தல் 2020 இல் தொடங்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு வளங்கள் திணைக்கள்ததின் கூற்றின் பிரகாரம் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு கடனளிக்கும் முகவருக்கு கடன் திருப்பிச் செலுத்தல்களாக ரூபா 398.94 மில்லியன் தொகை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் மற்றும் நலிவான செயற்திட்ட முகாமைத்துவம் என்பன காரணமாக கைதவிர்க்கப்படாத கடன் மீதிகளிற்கு எதிராக கடனளிக்கும் முகவரால் 2019 திசெம்பர் 31 வரை ரூபா 153.72 மில்லியன் தொகை கடப்பாட்டுக் கட்டணங்களாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கு மேலதிக கிரயம் ஏற்படும் சாத்தியம். | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவிலலை | அமுலாக்கல் முகவரான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தாமதப்படுத்தாமல் செயற்திட்ட செயலாற்றலை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | தெய்யன்னேவெலவில் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்ட இறைக்கும் இல்லம் மற்றும் மஹாமாய ஆரம்ப பாடசாலைக்கு அருகிலுள்ள நிர்மாணம் தொடருகின்ற இறைக்கும் இல்லம் என்பவற்றின் காணிகளின் உரிமையாண்மை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமையாண்மை மாற்றுவதிலுள்ள தாமதம் செயற்திட்ட செயலாற்றலை பாதகமாக பாதிக்கக் கூடும். | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவிலலை | காணிகளின் உரிமையாண்மையை மாற்றி பெறுவதற்கு மேலும் தாமதப்படுத்தாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 முரணான நடவடிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| செயற்திட்டமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்காத செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கொருவரை சேர்த்திருந்தது. எவ்வாறாயினும், உரிய உத்தியோகத்தர் செயற்திட்டத்தின் எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்காததுடன் உரிய உத்தியோகத்தர் வருகை தந்ததிற்கான எவ்வித பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், செயற்திட்ட அலுவலகம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேதனமாக ரூபா 2.60 மில்லியனும் உரிய உத்தியோகத்தருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தின் குத்தகை வாடகையாக ரூபா 2.53 மில்லியனும் ஏற்றிருந்தது. | செயற்திட்டத்தின் நிர்வாக கிரயம் தேவயற்று அதிகரித்திருந்தது. | செயற்திட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் தலைமை அலுவலக சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருநதார். ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தால் எவ்வித வருகை பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டமானது அனுமதிக்கப்பட்ட செயற்திட்ட பதவியணியினருக்கு மாத்திரமே சம்பளங்கள் செலுத்த வேண்டும். |

**3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போதான செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்தப் பட்டிருக்காததுடன் 2016 யூன் மாதத்தின் 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளர் செர்க்கப்பட்ருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நிதிகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான நலிவான கட்டுப்பாடு செயற்திட்ட செயலாற்றலை பாதகமாக பாதிக்கும். | முகாமைத்து கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |